**த. நா.ச.பே. எண் : 023** **நாள் :29.09.2015**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 29.9.2015

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏழை எளிய மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத அத்தியாவசிய பொருட்களை காலத்தே வழங்கும் தலையாய பணியை செவ்வனே மேற்கொண்டு வரும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் பொதுமக்களுக்கு சிறந்த சேவை வழங்கும் கூட்டுறவுத் துறை ஆகியவை பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சேவை வழங்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை கடந்த நான்கு ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இந்த இரண்டு துறைகளையும் மேலும் வலுப்படுத்தும் வகையில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. விவசாயப் பெருமக்களுக்கும், பொது மக்களுக்கும் பல்வேறு சேவைகளை வழங்கும் கூட்டுறவு அமைப்புகளுக்கு கிடங்குகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள், கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய கட்டடங்கள் என பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தி வருகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளில் 3,381 கூட்டுறவு அமைப்புகளுக்கு உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளது.

   இதன் தொடர்ச்சியாக, 110 கூட்டுறவு அமைப்புகளுக்கு பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை, பாதுகாப்பு பெட்டகம் போன்ற பல வசதிகளை உள்ளடக்கிய சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 100 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு தலா 20 லட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; ராமநாதபுரம் மற்றும் நாசரேத் நகர கூட்டுறவு வங்கிகளுக்கு முறையே, 40 லட்சம் ரூபாய் மற்றும் 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருவண்ணாமலை மாவட்டம், போளூர் மற்றும் செங்கம்; காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு மற்றும் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஆகிய, தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; கடலூர் மத்திய கூட்டுறவு வங்கியின் குறிஞ்சிப்பாடி கிளை, புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கியின் கல்லூர் கிளை, சேலம் மத்திய கூட்டுறவு வங்கியின் எடப்பாடி மற்றும் பேளுக்குறிச்சி கிளைகள் ஆகியவற்றுக்கு 2 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 23 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவில் 110 கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில், உறுப்பினர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அவர்களது அவசர கடன் தேவைக்காக, நகையீட்டுக் கடன் பெறுகின்றனர். அவ்வாறு பெறப்படும் நகைகளையும், மதிப்பு மிக்க பொருட்கள் மற்றும் ஆவணங்களையும் பத்திரமாக பாதுகாத்து வைத்திடவும் கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு முறைகளை

வலுப்படுத்த, பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, 39 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 46 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 42 கிளைகள், 43 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் 16 கிளைகள் மற்றும் 5 விரிவாக்க மையங்கள் மற்றும் இதர 12 கூட்டுறவு நிறுவனங்கள் என மொத்தம், 203 கூட்டுறவு நிறுவனங்களில் 8 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் பாதுகாப்பு அறைகள் மற்றும் பாதுகாப்பு கதவுகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. 2,672 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் கிளைகள், 106 பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கங்கள், 67 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கிளைகள், 68 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் கிளைகள், மத்திய கூட்டுறவு வங்கிகளின் 10 கிளைகள், 11 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் அதன் கிளைகள் மற்றும் இதர 32 கூட்டுறவு நிறுவனங்கள் என மொத்தம், 2,966 கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பிற்காக 16 கோடியே 2 லட்சம் ரூபாய் செலவில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு கேமரா CCTV நிறுவப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. பெருகி வரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, வணிக வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு அமைப்புகள் வளர்ச்சி அடையவும், வாடிக்கையாளர்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவையை வழங்கிடும் பொருட்டும் கூட்டுறவு வங்கிகள் கணினிமயம் ஆக்கப்பட்டு உள்ளன. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகள் கணினிமயம் ஆக்கப்பட்டு உள்ளன. மேலும், வெளிப்படைத் தன்மை, மற்றும் சிறப்பான சேவையை மக்களுக்கு வழங்கும் பொருட்டு, அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களும் கணினிமயம் ஆக்கப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக, பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்களும், கணினிமயம் ஆக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் மொத்தம் 1,758 பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணய சங்கங்கள் அரசுத் துறை, தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சேவை புரிந்து வருகின்றன. இச்சங்கங்களில் தற்போது 9,61,314 உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்களுக்கு தனி நபர் பிணைக் கடன், சம்பளக் கடன் மற்றும் கல்விக் கடன்களை வழங்கி, அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்காக இச்சங்கங்கள் அரும்பங்காற்றி வருகின்றன. இச்சங்கங்கள் 1,635 கோடியே 8 லட்சம் ரூபாய் பங்கு மூலதனத்துடனும் 10,223 கோடியே 78 லட்சம் ரூபாய் நடைமுறை மூலதனத்துடனும் செயல்பட்டு வருகின்றன. எனவே, இச்சங்கங்களின் செயல்பாடுகளை கணினிமயம் ஆக்குவதன் மூலம் நிர்வாகச் செலவுகள் குறைவதுடன், உறுப்பினர்களுக்கு சிறப்பான சேவைகளை விரைவாக வழங்கிட இயலும். எனவே, முதல் கட்டமாக, நடப்பாண்டில் 1,240 பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணய சங்கங்கள் 9 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கணினிமயம் ஆக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**5.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் **8.27** லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட **219** சொந்த கிடங்குகள் செயல்பாட்டில் உள்ளன. பொது விநியோக திட்ட அத்தியாவசிய பொருள்களை ஏற்றுதல், இறக்குதல், நகர்வு செய்தல் மற்றும் அட்டியிடுதல் ஆகிய பணிகள் தற்பொழுது, சுமை தூக்குவோரால் கையாளப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் சுமார் **4.10** லட்சம் மெட்ரிக் டன் அரிசி மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களான கோதுமை, சர்க்கரை, பருப்பு மற்றும் பாமாயில் போன்றவை இக்கிடங்குகளிலிருந்து பொது விநியோகத் திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கிட நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது. மேலும் இச்சுமை தூக்குவோர், பொது விநியோக திட்டத்திற்காக, கொள்முதல் செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களை கிடங்குகளில் இறக்குதல் மற்றும் இவற்றினை சமச்சீர் செய்து சிப்பம் இடுதல் போன்ற இதர பணிகளையும் மேற்கொள்கின்றனர். இவர்களின் பணிகளை எளிதாக்கும் வகையில் தேவையான இயந்திரங்கள் வாங்கி வழங்கப்படும்.

முதல் கட்டமாக, தற்பொழுது கட்டப்பட்டு வரும் அதிக கொள்ளளவு கொண்ட, நாகப்பட்டினம் மாவட்டம், கோவில்பத்து மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் சென்னம்பட்டி ஆகிய கிடங்குகளிலும், மேலும் புதிதாக கட்டப்பட உள்ள நாகப்பட்டினம் மாவட்டம் – எடமணல், மாணிக்க பங்கு கிடங்குகள், திருவாரூர் மாவட்டம் – குடவாசல் கிடங்கு ஆகிய கிடங்குகளில் தானியங்கி இழுவை இயந்திரங்கள் Conveyors, சுமையினை ஏற்றி, இறக்கி அட்டியிடும், இயந்திரங்கள் Stackers மற்றும் மின்னாக்கிகள் Generators போன்றவை நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சென்னை, காஞ்சிபுரம், கிணத்துக்கடவு, கருமத்தம்பட்டி, கடலாடி, தூத்துக்குடி, தேவகோட்டை, புனக்குளம் மற்றும் சாத்தான்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள நடுத்தர கொள்ளளவு கொண்ட கிடங்குகள் மற்றும் திருவாரூர் மாவட்டம், கோவிலூரில் புதிதாக கட்டப்பட உள்ள கிடங்கு ஆகியவற்றில் தானியங்கி சுமைதூக்கி Fork Lift அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இயந்திரங்கள் **14** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**